**செய்யாறு சிப்காட்டில் ரூ.290 கோடியில் விபத்து ஆய்வகத்துக்கு அடிக்கல்**

# செங்கல்பட்டில் ரூ.210 கோடியில் மின்கலன் பரிசோதனை மையம்

## ● முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்

● **சென்னை**

செங்கல்பட்டில் ரூ.210 கோடியில் தனியார் நிறுவன மின்கலன் பரிசோதனை ஆய்வகத்தை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.290 கோடியில் விபத்து பரிசோதனை ஆய்வகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.



இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது

திமுக அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 4,10,561 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ரூ.2,73,448 கோடி மதிப்பிலான 224 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் சில திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில், மஹிந்திரா குழுமத்தின் அங்கமான மஹிந்திரா அண்டு மஹிந்திரா நிறுவனம், 2012-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் 125 ஏக்கரில் மஹிந்திரா ஆராய்ச்சி மையத்தை நிறுவியது. இது சர்வதேச அளவிலான, மோட்டார் வாகனம் மற்றும் டிராக்டர் தயாரிப்புகளின் முதலாவது ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாகும்.

இந்த மையம் சமீபகாலங்களில் எக்ஸ்யுவி 500, தார், எக்யுவி 300, கேயுவி 100, ஆல்டுராஸ், டியுவி 300 மற்றும் அர்ஜுன் நோவோ, யுவோ மற்றும் ஜிவோ போன்ற பல்வேறு புதிய வகை வாகனங்கள் மற்றும் டிராக்டர்களை உருவாக்கியுள்ளது. மேலும், செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் 454 ஏக்கரில் இந்நிறுவனம் அமைத்துள்ள சோதனைத் தடத்தில், வாகன சவாரி, கையாளுதல் மற்றும் பிற திறன் சரிபார்ப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம், 2022 ஜூலை மாதம் தமிழக அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்படி, 2022 ஏப்ரல் முதல் 4 ஆண்டுகளுக்குள் கூடுதலாக ரூ.500 கோடி முதலீடு மேற்கொள்வதாகவும், குறைந்தபட்சம் 850 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்றும் உறுதி அளித்திருந்தது.

அதன்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ. 210 கோடியில் மஹிந்திரா ஆராய்ச்சி மையம், செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.290 கோடியில் மஹிந்திரா எஸ்யுவி வாகனங்களுக்கான பரிசோதனைத் தளம் (MSPT) மற்றும் கோவையில் ரூ.12 கோடியில் தகவல் தொழில்நுட்ப மையம் ஆகியவற்றை அமைக்க முன்வந்துள்ளது.

அதன்படி, செங்கல்பட்டில் ரூ.210 கோடியில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்திரா மின்கலன் பரிசோதனை மையத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக நேற்று திறந்து வைத்தார். புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட ஓராண்டிலேயே இதன் தொடக்க விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும், மஹிந்திரா நிறுவனம் சார்பில், செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.290 கோடியில், மின் வாகன விபத்து பரிசோதனை ஆய்வகம் மற்றும் மின்கலன் கட்டுருவாக்க மையம் நிறுவும் திட்டத்துக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், தேசிய அளவில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இத்தகு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், இந்த துறையில் தமிழகத்தை வலுப்படுத்தும்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, தொழில் துறைச் செயலர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே.விஷ்ணு, மஹிந்திரா அண்டு மஹிந்திரா நிறுவன உயர் அலுவலர்கள் ஆர்.வேலுசாமி, அபாந்தி சங்கரநாராயணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





பெ.சண்முகம்
மாநிலத் தலைவர்
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்.
தொடர்புக்கு: pstribal@gmail.com

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடிய வள்ளலார் வாழ்ந்து மறைந்த கடலூர் மாவட்டத்தில் கதிர் வரும் பருவத்தில் இருந்த நெற்பயிர்கள் பொக்லைன் இயந்திரத்தைக் கொண்டு அழிக்கப்பட்டது, மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்த வழக்கை விசாரித்த நீதிபதியே அக்காட்சியைக் கண்டு கண்கலங்கியதாகக் கூறியிருக்கிறார். ஆட்சியாளர்கள் அல்லது நெய்வேலி நிலக்கரி நிறுவனம் (என்.எல்.சி.) தரப்பில் என்ன காரணம் சொன்னாலும், பயிர்கள் அழிக்கப்பட்ட செயல் எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல. தார்மிகரீதியில் மட்டுமல்ல, சட்டப்படியும் அந்த நடவடிக்கை தவறு.

**பொருந்தா வாதங்கள்:** 2008–2009ஆம் ஆண்டிலேயே நிலத்துக்கான இழப்பீட்டை ஏக்கருக்கு ரூ.6 லட்சம் என்ற அடிப்படையில் கொடுத்துவிட்டதாகவும் ஆனால், நிலத்தைக் கையகப்படுத்தாமல் கருணை அடிப்படையில் விவசாயிகள் பயிர் செய்ய அனுமதித்திருந்ததாகவும் மாவட்ட ஆட்சியரும், என்.எல்.சி. நிர்வாகத்தினரும் கூறுகின்றனர். நிலத்துக்கு இழப்பீடு கொடுத்திருந்தாலும், விவசாயிகள் பயிர் செய்து வரும் நிலையில், 'நிலத்தைக் கையகப்படுத்தப் போகிறோம்' என்று சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு முன்னறிவிப்பு நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும். அல்லது பயிர் செய்வதற்கு முன்பே, 'நிலத்தில் இந்த ஆண்டு என்.எல்.சி. பணிகளைத் தொடங்கவிருக்கிறது. எனவே, பயிரிடும் பணியை மேற்கொள்ளாதீர்கள்' என்று விவசாயிகளிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

இப்படி எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், காவல் துறை உயர் அதிகாரிகள் தலைமையில் பல நூற்றுக்கணக்கான காவல் துறையினர், வருவாய்த் துறையினரின் ஒத்துழைப்புடன் பயிர் அழிப்பு நடைபெற்றுள்ளது. நிலம் எடுக்கப்படுவது என்.எல்.சி. நிறுவனத்துக்காக என்றாலும், நிலத்தை எடுத்துக் கொடுக்கும் பணியைத் தமிழ்நாடு அதிகாரிகள் முன் நின்று செய்கின்றபோது, விவசாயிகளின் கோபம் மாநில அரசுக்கு எதிராகத் திரும்பியிருப்பதைத் தவிர்க்க முடியாது. மாவட்ட அதிகாரிகளின் அலட்சியமான அணுகுமுறைதான் இதற்குக் காரணம்.

**சட்டம் என்ன சொல்கிறது?** போர்க்கால அடிப்படையில் இரவு பகலாகக் கால்வாய் தோண்டும் பணியை என்.எல்.சி. நிர்வாகம் மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. சுரங்கத்திலிருந்து நீரை வெளியேற்றுவதற்குப் பரவனாறு விரிவாக்கம், வாய்க்கால் அவசியம் என்பது என்.எல்.சி. நிர்வாகத் தரப்பில் சொல்லப்படும் காரணம். உயர் நீதிமன்ற நீதிபதி சரியாகக் கேட்டிருப்பதைப் போல, அதை இரண்டு மாதங்கள் கழித்து – அறுவடைக்குப் பிறகு செய்திருக்க முடியாதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இக்கேள்வியில் உள்ள நியாயத்தை யாராலும் புறக்கணிக்க முடியாது.

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக 2013ஆம் ஆண்டு புதிய சட்டம் இயற்றப்பட்டு, அது நடைமுறைக்கு வந்துவிட்டது. அந்தச் சட்டப்படி எந்தத் திட்டத்துக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறதோ, அதை ஐந்தாண்டு காலத்துக்குள் பயன்படுத்தவில்லை என்றால், சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமே நிலத்தைத் திருப்பி ஒப்படைத்துவிட வேண்டும் (சட்டப் பிரிவு 24). நிலத்துக்கான இழப்பீட்டை விவசாயிகள் பெற்றிருந்தாலும் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றுதான் சட்டம் சொல்கிறது. எனவே, இரண்டாவது சுரங்க விரிவாக்கத்துக்காக எடுக்கப்பட்ட நிலத்தைச் சட்டப்படி திரும்ப விவசாயிகளிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**தொலைநோக்குப் பார்வை அவசியம்:** என்.எல்.சி. முதல் சுரங்கம் கிட்டத்தட்ட மூடப்படும் நிலையில் உள்ளது. இரண்டாவது சுரங்கம் விரிவாக்கம் செய்யப்பட்டாலும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிலக்கரி கிடைக்கலாம்; அதற்குப் பிறகு நெய்வேலி நிறுவனம் தொடர்ந்து செயல்பட முடியுமா என்ற கேள்வி எழுகிறது. முதலாவது சுரங்கம் மூடப்பட்டாலும், அந்த நிலத்தை வேறு எதற்கும் பயன்படுத்த முடியாது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனற்று வீணாகிவிடும். மூன்றாவது சுரங்கம், நான்காவது சுரங்கம் என்று புதிது புதிதாகத் தோண்டிக்கொண்டே இருந்தால் தமிழ்நாட்டின் வரைபடத்தில் கடலூர் என்ற மாவட்டமே காலப்போக்கில் இல்லாமல் போய்விடும். இதனால் பாதிக்கப்படப் போகும் பல லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஆட்சியாளர்களால் மறுவாழ்வு ஏற்படுத்தித் தர முடியாது. எனவே, இந்தப் பிரச்சினையைத் தொலைநோக்குப் பார்வையோடு அணுக வேண்டும்.

2021ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற உலகக் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில், நிலக்கரிப் பயன்பாட்டை இந்தியா படிப்படியாகக் குறைக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி பேசியது குறிப்பிடத்தக்கது. புவி வெப்பமாதலுக்கான காரணங்களில் நிலக்கரி, பெட்ரோலியம் உள்ளிட்ட படிவ எரிபொருள்களுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. உலகில் பல நாடுகள் அனல் மின் உற்பத்தியைக் கைவிட்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றன. நிலக்கரி மூலம் மின் உற்பத்தி என்பது சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, மாற்று வழியில் மின்சார உற்பத்திக்கு அரசு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மின் உற்பத்திக்காக நிலக்கரியை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. காற்றாலை, சூரிய ஒளி மின் உற்பத்தி, புனல் மின்சாரம், அணு மின்சாரம் என எத்தனையோ மாற்று வழிகள் நடைமுறையில் இருக்கின்றன.

**இரங்கிவராத என்.எல்.சி:** என்.எல்.சி-க்காக இதுவரை 37,256 ஏக்கர் நிலம் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை இழந்த விவசாயக் குடும்பங்கள், இந்த நிலத்தை நம்பியிருந்த விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் என்ன கதிக்கு ஆளாகின என்பது குறித்து எவ்வித ஆய்வும் கிடையாது. நிலத்துக்கான இழப்பீடாக வழங்கப்படும் சொற்பத்தொகையை வைத்துக்கொண்டு அந்தக் குடும்பங்களால் வாழ்நாள் முழுக்க வாழ இயலாது. நிலத்துக்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகைக்கும், உண்மையான சந்தை நிலவரத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இருக்கிறது. ஏக்கருக்கு ரூ.1 கோடி கொடுத்தாலும், ஒரு யூனிட் மின்உற்பத்தி செலவில் 20 பைசா மட்டுமே நிலத்துக்கான செலவாக இருக்கும். ஆனால், என்.எல்.சி. நிறுவனம் இதில் தாராள மனதுடன் நடந்துகொள்ள மறுக்கிறது.

உணவுப் பாதுகாப்பு என்பது எல்லாவற்றையும்விட முக்கியமானது. நெல் விளையும் பூமியை வேறு பணிகளுக்கு மாற்றுவது உணவு தானிய உற்பத்தியில் பெரும் பற்றாக்குறை ஏற்பட வழிவகுக்கும். தொடர்ந்து நிலக்கரி கிடைத்துக்கொண்டேயிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆனால், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு நெல் விளைந்து, அந்த நிலம் வயிற்றுக்குச் சோறிடும் என்பதற்கு உத்தரவாதம் உண்டு.

எனவே, என்.எல்.சி. நிர்வாகம் கால்வாய் தோண்டும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும். அழிக்கப்பட்ட பயிர்களுக்கு முழுமையான இழப்பீட்டை வழங்க வேண்டும். விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அமைதியை ஏற்படுத்துவது அவசியம். புதிதாக நிலம் கையகப்படுத்துவதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். காவல் துறையை ஏவி பொய் வழக்குப் போடுவது, சிறையில் அடைப்பது போன்ற அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது உடனடித் தேவை. ●

# ஆழ்துளைக் கிணறு: ஆபத்துக்கு முடிவுகட்டுவோம்!

பிஹாரில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த மூன்று வயதுச் சிறுவன், ஒன்பது மணி நேரக் கடும் போராட்டத்துக்குப் பிறகு பத்திரமாக மீட்கப்பட்டிருக்கிறான். நல்வாய்ப்பாக இந்த முறை உயிரிழப்பு ஏற்படவில்லை என்றாலும், ஆழ்துளைக் கிணறுகளால் ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு முடிவுகட்ட வேண்டிய அவசியத்தை இந்தச் சம்பவம் மீண்டும் உணர்த்தியிருக்கிறது. இந்தப் பின்னணியில், தமிழ்நாட்டில் இருக்கும் கைவிடப்பட்ட திறந்தவெளிக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள், கைவிடப்பட்ட குவாரிக் குழிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்குத் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் பராமரிப்பு இல்லாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ள திறந்தவெளிக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள், குவாரிக் குழிகள் போன்றவை மனிதர்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்குப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளன; பல வேளைகளில் உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. 2019இல், திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே நடுக்காட்டுப்பட்டியில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 2 வயது சுஜித், 83 மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு சடலமாக மீட்கப்பட்டது ஒரு துயரமான உதாரணம். கால்நடைகள் உள்ளிட்ட பிற உயிர்களுக்கும் ஆழ்துளைக் கிணறுகள் அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தியாவில் சுமார் 2 கோடியே 70 லட்சம் கிணறுகள்-ஆழ்துளைக் கிணறுகள் உள்ளதாக மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் (CGWB) புள்ளிவிவரம் கூறுகிறது. இந்தப் பின்னணியில், ஆழ்துளைக் கிணறு விபத்துகளைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வழிகாட்டி நெறிமுறைகளை (11.02.2010 & 06.08.2010 தேதியிட்ட ஆணைகள்) 2010ஆம் ஆண்டிலேயே உச்ச நீதிமன்றம் வகுத்தளித்திருக்கிறது. அதன்படி, ஆழ்துளைக் கிணறு தோண்டுவதற்கு உள்ளாட்சி நிர்வாகத்திடம் முறைப்படி அனுமதி பெறுதல், தோண்டும்போதே சுற்றிலும் வேலி கட்டுதல், ஆழ்துளைக் கிணறு தோண்டும் நிறுவனத்தின் பெயர், நில உரிமையாளரின் பெயர், தோண்டும் கால அவகாசம் ஆகியவை குறித்த தகவல் பலகையை நிறுவுதல்; தோண்டிய கிணற்றில் தண்ணீர் இல்லாமல் போனாலோ தண்ணீர் வற்றிக் கைவிடப்பட்டாலோ உடனடியாக அதை மண்ணிட்டு மூடி, சிமென்ட் மூலம் வாய்ப் பகுதியை அடைத்தல் அல்லது குழாயின் மேற்பகுதியை மூடிபோட்டு அடைத்தல், கிணற்றை மூடிவிட்ட தகவலை உள்ளாட்சி நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்துதல் ஆகியவை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆழ்துளைக் கிணறுகளின் பாதுகாப்பு குறித்து மேற்கொள்ள வேண்டிய பணிகளின்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தையும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் எனவும், இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பசுமை நிதி (Green Fund), மாவட்டக் கனிம நிதி (District Mineral Fund) ஆகிய நிதி ஆதாரங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய செயல்திட்டத்தை ஆகஸ்ட் 25ஆம் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும்; அதனடிப்படையில் செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளரின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசின் வருமுன் காக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது; ஆனால், மக்களின் முழு ஒத்துழைப்பு இல்லாமல் இத்தகைய முன்னெடுப்புகள் முழுமை பெறாது. எனவே, ஆழ்துளைக் கிணறுகளால் இனி ஒரு உயிர்கூடப் பறிபோகாத வகையில் அரசும் மக்களும் இணைந்து செயலாற்ற வேண்டியது அவசியம்.